**ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர்(பொ) அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திரு/திருமதி.ம.ராஜசேகர்**

நக.எண்.711/2023 நாள்.17.07.2023

**க.உரிமம்.எண்.12/2023–2024**

**பொருள்:** கட்டிட உரிமம் ஆண்டிபட்டி பேரூராட்சி வார்டு எண்: **WD–15, அன்னை நகர்** கட்டிட சர்வே எண்:723/2B, 724/1, 901 மனை எண்:14 – **குடியிருப்புக் கட்டிடம், தரைதளம்** கட்ட அனுமதி வழங்கி ஆணயிடப்படுகிறது.

**பார்வை:** திரு/திருமதி: ச.சுஜிதா த/பெ, க/பெ: விக்னேஷ்வரன் என்பவரிடமிருந்து வரப்பெற்ற விண்ணப்பம் எண்: 2 நாள்: 28.06.2023

**ஆணை:**

ஆண்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட கட்டிட சர்வே எண்: 723/2B, 724/1, 901 , மனை எண்:14–ல், திரு/திருமதி: : **ச.சுஜிதா** த/பெ, க/பெ: **விக்னேஷ்வரன்** என்பவர் **தரைதளம் 118.00ச.மீ,** தார்சு கட்டிடம் கட்டிக் கொள்ள பார்வையில் காணும் விண்ணப்பத்தில் கேட்டுள்ளார். வரைபடம் நகல் சமாப்பித்துள்ளார்.

விண்ணப்பம் விரிவாக பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி **17.07.2023** முதல் ஐந்து வருட காலத்திற்கு அதாவது **16.07.2028** வரை அமுலில் இருக்கும்.
2. அனுமதிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்பட வேண்டும். அப்படி கட்டி முடிக்கப்படவில்லை என்றால், அனுமதிக்காலம் காலாவதியாவதற்கு முன்பாகவே உரிய கட்டணத்தை செலுத்தி, மனு செய்து அனுமதி காலத்தை நீடித்துக் கொள்ள வேண்டும். அப்படி உரிய காலத்திற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையென்றாலும், உரிய கட்டணம் செலுத்தி அனுமதி காலத்தை உரிய காலக்கெடுவிற்குள் நீடிக்கத் தவறினாலும் அனுமதிக்கப்படும் கட்டிட உரிம அனுமதி தானாகவே காலாவதியானதாகவும், ரத்து செய்யப்பட்டதாகவும் கருதப்படும்.
3. மேற்படி அனுமதி தேவைப்பட்டால் ஏற்கனவே பெற்ற அனுமதி கைவிடப்பட்டு புதியதாக வரைபடம் தயாரித்து முறைப்படி புதியதாக அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். அனுமதியை புதுப்பித்தபின்னரே, மேற்கொண்டு வேலையைத் தொடரவேண்டும். மேற்படி அனுமதி இன்ன தேதியில் காலாவதியாகிறது என்றோ, அனுமதியை புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றோ இவ்வலுவலகத்திலிருந்து எந்தவித தகவலும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ கொடுக்கப்படமாட்டாது.
4. பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தையோ (அ) அரசுக்கு சொந்தமான இடத்தையோ அல்லது இதர தனியாருக்கு சொந்தமான இடத்தையோ அல்லது தெருவையோ எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
5. தெருவை அனுசரித்து வீட்டின் முன்புறம் இரண்டு மீட்டர் நிலம் காலியாக விட்டு கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி காலி இடத்தில் படிகள் தவிர வேறு எந்தவிதமான கட்டிடமும் கட்டக்கூடாது.
6. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கோ அல்லது வேறு உபயோகத்திற்கோ மண் எடுக்கக்கூடாது.

7. மின்சார கம்பிகளுக்கும் கட்டிடத்திற்கும் இடையில் 1.75 மீட்டருக்கு மேலாகவும், செங்குத்து உயரம் 4.50 மீட்டருக்கு மேலாகவும் இருக்க வேண்டும்.
8. இத்துடன் அங்கீகாரம் செய்து இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படிதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். இதில் ஏதேனும் மாறுதல் செய்வதாய் இருந்தால், முன்கூட்டியே இவ்வலுவலக அனுமதி பெற்று அதன் பிறகுதான் மாறுதல் செய்யவேண்டும்.
9. கழிப்பிடம், சாக்கடைத் தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி தளம் போடப்பட்டும், எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான மார்க்கம் உள்ள வகையிலும் கட்டப்பட வேண்டும். கழிப்பிடம் கண்டிப்பாக நவீன நீரடிக் கழிப்பிடமாக கட்டப்பட வேண்டும்.
10. சமையல் அறையில் புகைக்கூண்டு முறைப்படி கட்டப்படவேண்டும்.
11. காற்றோட்ட வசதிக்கு ஏற்ப, ஜன்னல்கள் மற்றும் வெண்டிலேட்டர்கள் முறைப்படி கட்டப்பட வேண்டும். தெருப்பக்கமுள்ள கதவுகள் உட்புறம் திறக்கும்படி அமைக்க வேண்டும்.
12. கட்டிட வேலையைத் தொடங்கும் முன், மேற்படி இடத்தில் மின் இணைப்பு இருந்தால் அதற்கு சம்மந்தப்பட்ட அலுவலரிடம் அனுமதி பெற்று, அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்.
13. எல்லை சுற்றுச் சுவர் (காம்பவுண்டு சுவர்) தெரு மட்டத்திலிருந்து 1.52 மீட்டருக்கு மேல் கட்டக்கூடாது.
14. கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் ஒரு செட் வைக்கப்படுவதுடன், பேரூராட்சி உத்தியோக ஸ்தர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர் செய்ய வேண்டும்.
15. கட்டிடம் கட்ட அனுமதி பெற்ற இடம், பொய்ப்பதிவு மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் சட்ட விதிகளுக்கு புறம்பாக பெற்றதாகவோ இருந்தால் மேற்படி அனுமதி உத்திரவு தானகவே ரத்தாகிவிடும்.
16. கட்டிடம் கட்டப்படும் பொழுதோ அதற்கு பின்போ கட்டிடத்தில் உள்ள செப்டிக் டேங்க் மற்றும் குடிநீர் தொட்டிகளில் கொசுப்புழு உருவாகாத வகையில் மூடி போட்டும் கொசு வலைகட்டியும் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

மேலே கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைப்படம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு:** அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் இரண்டு நகல்

செயல் அலுவலர்
ஆண்டிபட்டி பேரூராட்சி
தேனி மாவட்டம்

**பெறுநர்:**

திரு/திருமதி : ச.சுஜிதா,
த/பெ, க/பெ : விக்னேஷ்வரன்,
வார்டு எண்.15, அன்னை நகர்,
ஆண்டிபட்டி.

**நகல்:** வரி வசூலர், ஆண்டிபட்டி பேரூராட்சி
(கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் வரிவிதிப்பு செய்ய உரிய நடவடிக்கைக்காக)

*Signature Not Verified*
*Signed by: Executive Officer*
*Location:Theni*
*Date:2023.07.17 13:09:48*